<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 539/2025</u>
<u>வழக்கு சாட்சி PW–3</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துராஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | தங்கையா | தொழில் | : | அரசு வேலை |
| கிராமம் | : | பாவூர்சத்திரம் | வயது | : | 56 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 28.04.2026.

**(எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பாவூர்சத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். அரசு போக்குவரத்து கழகத்தில் டயர் பொறுப்பாளராக வேலை செய்து வருகிறேன். 30.12.2020 அன்று நான் இன்ஸ்பெக்ஸ்னுக்காக தென்காசி நடு பல்க் அருகில் பஸ் நம்பர் 2326 ல் ஏறி செங்கோட்டைக்கு சென்றுக்கொண்டிருந்தேன். அந்த பஸ்ஸை பரமசிவன் என்பவர் ஓட்டிவந்தார். பத்மநாபன் என்பவர் நடத்துனராக இருந்தார். அரசு கால் நடை மருத்துவமனை அருகே வரும்போது சத்தம் கேட்டது. பேருந்தின் கண்ணாடி உடையும் சத்தம் கேட்டது. டிரைவர் வண்டியை நிறுத்தி பார்த்தார். முன்னால் ஒரு நபர் நின்றுக்கொண்டிருந்தார். அவரிடம் போய் ஓட்டுநர் ஏன் கல்லை எடுத்து எறிந்தாய் என்று கேட்டார். அப்போது அந்த நபர்இதற்கு முன்னால் என்மீது மோதுவது போல் வந்தது என்றும், அதனால் கல்லை எடுத்து எறிந்தேன் என்று கூறினார். பின்னர் ஓட்டுநர் சத்தம்போடவும் அவர் ஓடிவிட்டார். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காணமுடியாது. ( எதிரி ஆஜரில்லை.) பஸ்ஸை எடுத்து நாங்கள் டிப்போவிற்கு சென்றுவிட்டோம்.

மறுநாள் காலை ஓட்டுநபர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

(குறுக்கு விசாரணை நேரமின்மை காரணமாக ஒத்திவைக்கப்படுகிறது. )

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.04 11:55:00 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 539/2025**
**வழக்கு சாட்சி PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பத்மநாபன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | திருமூர்த்தி | தொழில் | : | அரசு போக்குவரத்து கழக நடத்துனர் |
| கிராமம் | : | வல்லம் | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 28.04.2026.

**(எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் வல்லத்தில் குடியிருந்து வருகிறேன். அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனராக வேலை செய்து வருகிறேன். 30.12.2020 அன்று பழனி–செங்கோட்டை அரசு பேருந்தில் நான் நடத்துனராக இருந்து காலையில் பழனி சென்றுவிட்டு இரவு 11.00 மணியளவில் செங்கோட்டை டிப்போவிற்கு சென்றுக்கொண்டிருக்கும்போது இலஞ்சி ரோடு கருப்பசாமி கோவில் அருகேரோட்டில் ஒரு நபர் நின்றுக்கொண்டிருந்தார். வண்டி போய்கொண்டிருக்கும்போது கல்லால் எறிந்தார். வண்டியின் முன்பக்க கண்ணாடி உடைந்தது. அதற்கு ரூ.23000/– சேதாரம் இருக்கும். நாங்கள் வாகனத்தை நிறுத்தி பார்க்கும்போது அந்த நபர் ஓடிவிட்டார். அவரை அப்போது பார்க்கவில்லை. பின்னர் தென்காசி காவல் நிலையம் கொண்டு சென்று வண்டியை விட்டுவிட்டு ஓட்டுநர் புகார் கொடுத்தார். பின்னர் போலீசார் அந்த நபரை கண்டுபிடித்து காண்பித்தார்கள். அப்போது நான் பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

(குறுக்கு விசாரணை நேரமின்மை காரணமாக ஒத்திவைக்கப்படுகிறது. )

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.04 11:55:08 +0530

<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 539/2025</u>
<u>வழக்கு சாட்சி PW–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமசிவன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இசக்கியாபிள்ளை | தொழில் | : | அரசு போக்குவரத்து கழக ஓட்டுநர் |
| கிராமம் | : | புளியரை | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 28.04.2026.

**(எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் புளியரையில் குடியிருந்து வருகிறேன். அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். 30.12.2020 அன்று பழனி–செங்கோட்டை அரசு பேருந்தில் நான் ஓட்டுநராக இருந்து காலையில் பழனி சென்றுவிட்டு இரவு 11.00 மணியளவில் செங்கோட்டை டிப்போவிற்கு சென்றுக்கொண்டிருக்கும்போது இலஞ்சி ரோடு கருப்பசாமி கோவில் அருகேரோட்டில் ஒரு நபர் நின்றுக்கொண்டிருந்தார். வண்டி போய்கொண்டிருக்கும்போது கல்லால் எறிந்தார். வண்டியின் முன்பக்க கண்ணாடி உடைந்தது. அதற்கு ரூ.23000/– சேதாரம் இருக்கும். வண்டியை நிப்பாட்டிவிட்டு அந்த நபரிடம் போய் ஏய்யா கல்லை கொண்டு எறிந்தீர் என்று கேட்டேன். அப்போது அவர் ஏற்கனவே ஒரு வாகனம் அவர் மீது இடிக்கிறமாதிரி வந்ததாகவும், அதனால் கல்லை கொண்டு எறிந்ததாகவும் சொன்னார். பஸ்ஸின் மீது கல்லால் எறிந்த நபரை என்னை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். அவர் பெயர் சுடலையாகும். ( எதிரி

ஆஜரில்லை. ) பின்னர் தென்காசி காவல் நிலையம் கொண்டு சென்று வண்டியை விட்டுவிட்டு புகார் கொடுத்தேன். அந்த புகார் அசாஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

(குறுக்கு விசாரணை நேரமின்மை காரணமாக ஒத்திவைக்கப்படுகிறது. )

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.05.04 11:55:16 +0530